**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF SUB JUDGE, NANGUNERI.

OS.175/2020

Civil Case No :: DW- 1

Name :: ஸ்ரீமன்நாராணன்

Father's/Husband's Name :: ராமசுப்பிரமணியன்

Village :

Taluk ::

Calling ::

Age ::

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 24.07.2025.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 3ம் பிரதிவாதியின் அதிகார முகவர் ஆவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

07.03.2013 ம் தேதியிட்ட பிரதிவாதி ராமசுப்பிரமணியன் ஸ்ரீமன்நாராயணனுக்கு எழுதிக் கொடுத்த சிறப்பு அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் பி.சா.ஆ-2 ஆகும். 28.01.1999 ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு தபசில் சொத்தை நம்பிக்கோனார் - 1, கோதையம்மாள்-2, முருகம்மாள் - 3 ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம எண்.73/1999 ன் சான்றிட்ட நகல் பி.சா.ஆ-3 ஆகும். 07.02.2009, 15.11.2010, 07.02.2011, 08.11.2012, 04.08.2010 ம் தேதிகளில் பிரதிவாதி பெயரில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்கட்டணம் செலுத்தியதற்கான மின் ரசீது சான்றிட்ட நகல் பி.சா.ஆ-4 ஆகும். 23.12.2005, 12.07.2010, 12.07.2011, 09.07.2012 ம் தேதிகளில் தபசில்சொத்திற்கு

நான்குநேரி பேரூராட்சி அலுவலகத்தில் பிரதிவாதி பெயரில் சொத்து வரி செலுத்தியதற்கான ரசீதுகள் (எண்ணம் - 5) சான்றிட்ட நகல் பி.சா.ஆ.5 ஆகும். 10.12.2003, 04.08.2008, 30.09.2009, 13.12.2010, 15.06.2010, 19.07.2011, 15.06.2010, 19.11.2011, 15.11.2011, 09.07.2012, 06.01.2014 ம் தேதிகளில் தபசில்சொத்திற்கு நான்குநேரி பேரூராட்சி அலுவலகத்தில் பிரதிவாதி பெயரில் தண்ணீர் வரி செலுத்தியதற்கான ரசீதுகள் (எண்ணம் - 9) சான்றிட்ட நகல் பி.சா.ஆ.6 ஆகும். 11.09.2001, 11.07.2001, 11.11.2003, 30.01.2004, 30.09.2005, 09.09.2006, 28.07.2011, 16.08.2012, 15.02.2013 ம் தேதிகளில் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட்டின் பிரதிவாதி பெயரில் தொலைபேசி எண்.50256 க்கு பில் தொகை கட்டியதற்கான ரசீதுகள் (எண்ணம் - 9) சான்றிட்ட நகல் பி.சா.ஆ.7 ஆகும். 08.03.2013 ம் தேதியிட்ட தபசில் வீட்டிற்குரிய வில்லங்க சான்றிதழ் 01.01.1999 முதல் 01.03.2013 வரை உள்ளது சான்றிட்ட நகல் பி.சா.ஆ-8 ஆகும். 12.03.2013 ம் தேதியிட்ட நான்குநேரி பேரூராட்சி பிரதிவாதிக்கு கொடுத்த சான்று பி.சா.ஆ-9 ஆகும். 26.03.2015 ம் தேதியிட்ட 4 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.55/2011 ல் வாதி தாக்கல் செய்த மேமோ அதன் மேல் பிறந்த உத்தரவு (சான்றிட்ட நகல் ) பி.சா.ஆ-10 ஆகும். 26.03.2015 ம் தேதியிட்ட வாதி திருநெல்வேலி 4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களுக்கு அசல் வழகது எண்.55/2011 ஐப் பொறுத்து கொடுத்த மனு மற்றும் அதன் பேரில் பிறந்த உத்தரவு (சான்றிட்ட நகல்) பி.சா.ஆ-11 ஆகும். 26.03.2015 ம் தேதியிட் அசல் வழக்கு எண்.55/2011 4 வது கூடுதல் மாவட்ட நீதிமன்ற தீர்ப்பாணை சான்றிட்ட நகல் பி.சா.ஆ.12 ஆகும்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.